பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:33 | 18.12.2023 திங்கட்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# வடமாகாணத்தில் அதிகரிக்கும் சட்டவிரோத மருந்துப்பாவனை




இலங்கையில் மருந்துப் பொருட்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் விநியோகித்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக NMRA (Nation medicine Regulatory Authority) என்பது சுகாதார அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. இவ் NMRA இல் கீழ் பதிவு செய்யப்பட்டு அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்ட மருந்துகளை மக்கள் பாவனைக்காக மருந்தகங்களிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் விற்பனை செய்ய முடியும். ஆனாலும் யாழ்ப்பாணத்திற்கு இந்தியாவிலிருந்து நேரடியாக கடல் மார்க்கமாக கொண்டுவரப்படுகின்றது. போதையை ஊக்குவிக்கும் மாத்திரைகள் (உதாரணம் Pregibalin) மற்றும் பல்வேறுபட்ட மருந்து வகைகள் சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு சட்டவிரோதமாக கடத்தி வரப்படுகின்ற மருந்து வகைகள் காலாவதியானவை மீள் திகதியிடப்பட்டும், தரம் குறைவானவை தரமான மருந்துப் பொருட்களின் பெயரிடப்படும். லேபல் (Label) மாற்றப்பட்டும் இருப்பதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளிவருகின்றன. சில மருந்துகள் போலியானதாக இருப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை இதய நோய், நரம்பியல் நோய், மனநல நோய் சம்மந்தப்பட்ட நோயாளர் பயன்படுத்துவனவாகவும், சத்திர சிகிச்சையின் பின்னராக ஏற்படும் வலியைக் குறைக்கும் மருந்து வகைகளும் மற்றும் குழந்தைப் பேறின்மை காரணமாக கருமுட்டை உற்பத்தியை மேற்கொள்ள அல்லது அதிகரிக்கப் பயன்படுத்தும் இயற்கை ஹோர்மோன் போன்று செயற்படுத்தும் மாத்திரைகள் என்பனவும் அடங்கும்.

மிகவும் நூதனமான முறையில் நோயாளிகள் சந்தேகிக்காது மருந்துகளை விற்பனை செய்கிறார்கள். எமது மக்கள் மருந்துகளை வாங்கும் போது சிலரே மருந்துகளை பார்த்து வாங்குகிறார்கள்... (பக்:02)

## ஈழத்தின் சின்னக்குயில் கில்மிஷா வெற்றி

தென்னிந்திய தொலைக்காட்சியான ஜீ தமிழ் நடத்திய ஸரிகமப லிட்டில் சேம்ப்ஸ் சீசன் 3 இறுதிப் போட்டியில் அரியாலையைச் சேர்ந்த கில்மிஷா வெற்றி பெற்றார். இந்திய தொலைக்காட்சி நடத்திய பாடல் போட்டியில் முதன் முதலாக இந்தியரல்லாத ஒருவர் வெற்றி பெற்றார்.

நேற்று இரவு நடந்த இறுதிச்சுற்றில் ரிக்ஷிதா, கில்மிஷா, சஞ்சனா, ருத்ரேஷ், நிஷாந்த கவின், கனிஷ்கர் ஆகியோர் போட்டியிட்டனர்.




## முன்னாள் சுகாதார செயலாளர் கைது

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று கைது செய்யப்பட்டார். தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை இறக்குமதி செய்தது தொடர்பாக சிஐடி வாக்கு மூலம் பதிவு செய்த பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்... (பக்:02)



## வடக்கில் 26 பாடசாலைகள் இயங்கவில்லை

வடக்கு மாகாணத்தில் கொட்டித் தீர்க்கும் மழை காரணமாக இன்று 26 பாடசாலைகள் இயங்கவில்லை என வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வடக்கில் தொடரும் கனமழையால் பல பாடசாலைகள் இடைத்தங்கல் முகாம்களாகவும், மேலும் சில பாடசாலைகள் நீரினால் சூழப்பட்டமையாலும் இயங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பாடசாலைகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பாடசாலைகளும் மன்னார் மாவட்டத்தில் 2 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் இன்று கற்றல் செயற்பாடுகளுக்காக இயங்கவில்லை என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் தொடர்ந்தும் அதிக மழை பொழிவதால் நாளை மேலும் பல பாடசாலைகள் இயங்க முடியாமல் பாதிப்படையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வட மாகாணத்தில். பெய்து வரும் கடும் மழையினால் 1,323 குடும்பங்களைச் சேர்ந்த 4,482 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் (டி.எம்.சி) தெரிவித்துள்ளது.

# வடமாகாணத்தில் அதிகரிக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனையோர் நம்பிக்கையின் நிமிர்த்தம் ஒன்றுமே பார்க்காது அவர்களால் வழங்கப்படுவனவற்றை வாங்கிக் கொள்வதுதான் வழக்கம். இதனை சாதகமாகப் பயன்படுத்தி மேற்குறிப்பிடப்பட்ட மருந்துகள் நோயாளிகளின் பாவனைக்கு என விற்கப்படுகின்றன.

உண்மையிலே இவற்றைக் கண்காணிக்க, சோதனையிடுவதற்கென வடமாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உணவு மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் (Food&Drugs inspector) நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆனாலும் அது பற்றிய தகவல் மக்களுக்கு தெரியவில்லை. இவ்வாறான சட்டவிரோத மருந்துகளின் ஊடுருவலை தடுக்க உயர் அதிகாரிகள் உரிய பொறிமுறைகளை உருவாக்கி மிக விரைவில் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். உண்மையிலே வைத்திய நிபுணர்கள் சரியான மருந்துகளை பரிந்துரைக்கின்றார்கள். ஆனாலும் அவர்கள் அறியாத வகையில் மருந்து கையாளும் பிரிவுகளில் இவ்வாறான தவறுகள் அரங்கேற்றப்படுகின்றன. ஆனால் முடிவில் பாதிக்கப்படுவது மக்களே.

எதிர்வரும் நாட்களில் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறக்கூடிய சந்தர்ப்பம் உருவாகின்றது. வரி செலுத்தப்படாத நேரடியாக மருந்து வகைகள் கொண்டு வரப்பட்டு விற்கப்படுகின்றமை பொருளாதார பின்னடைவிற்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைகின்றது.

# முன்னாள் சுகாதார செயலாளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊழல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக, மருத்துவ வழங்கல் பிரிவின் இயக்குநர் உட்பட பல அதிகாரிகள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை இறக்குமதி செய்வது தொடர்பாக சிஐடியால் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட கைதுகள், கீழ்மட்ட நபர்களை மட்டுமே குறிவைப்பதாக சுகாதார நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் காலமானார்



மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் இன்று காலமானார்.

2010 ஆம் ஆண்டு இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்திய போட்டியில் ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள், மெட்ரோ நியூஸ் பத்திரிகையில் 'விலேஜ் விசிட்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றுக்கு விருது பெற்றார்.

# மலேசியாவில் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற இலங்கையர்




மலேசியாவில் இடம்பெற்ற Asian Classic Powerlifting Champion ship 2023 போட்டியில் இலங்கை தேசிய பளுதூக்கல் அணிசார்பாக பங்குபற்றிய Kunam Pusha இரண்டு வெள்ளி பதக்கங்களைப் பெற்றுள்ளார்.




"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இலங்கையில் தடை?

வெளிநாட்டு கடல் அறிவியல் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இராஜதந்திர அனுமதி வழங்குவதை நிறுத்தி வைப்பது குறித்து பரிசீலித்து வருவதாக, இந்த விவகாரத்திற்கு நெருக்கமான அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டு போர்க்கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இலங்கைக்கடல், வான்வெளி மற்றும் உள்ளூர் துறைமுகங்களில் பல வெளிநாட்டுப் பணிகளுக்கு அழைப்பு விடுக்க இராஜதந்திர அனுமதியை வழங்குவதற்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறையை இலங்கை தெரிவித்த சில வாரங்களுக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கடல் பகுதியில் அல்லது அதன் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதற்கு ஒருவருட கால தடையை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. இந்தக் கப்பல்களின் வருகை தீவிர இராஜதந்திர பதட்டங்களை உருவாக்குகிறது, மேலும் இது (2024) ஒரு தேர்தல் ஆண்டு. அரசாங்கம் வரக்கூடிய அழுத்தத்தின் காரணமாக, இத்தகைய கப்பல் வருகைகள் பிராந்தியத்திற்கும் இலங்கைக்கும் மிகவும் இடையூறு விளைவிக்கும். எனவே, ஓராண்டு அல்லது அதற்கும் மேலாக தடைவிதிக்க பரிசீலிக்கப்படுகிறது, என்று ஒரு மூத்த அரசாங்க அமைச்சர் கூறினார்.

சீனாவின் இன்னொரு ஆராய்ச்சிக் கப்பலான சியாங் யாங் ஹாங் 3 ஐ 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கைத் துறைமுகங்களுக்கு அழைத்து ஆய்வு நடத்த அனுமதிக்க வேண்டும் என்று சீனா விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து அரசாங்கம் தற்காலிகத் தடைத் திட்டத்தைப் பரிசீலிக்கத் தொடங்கியுள்ளதாக நம்பத்தகுந்த தகவல் கிடைத்தது. சியாங் யாங் ஹாங் 3 இலங்கையின் கடல்சார் களத்தில் ஆய்வு நடத்துவதற்கான இராஜதந்திர கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

சியாங் யாங் ஹாங் 3 கப்பல் ஆய்வுக்காக மாலைதீவிடமும் இலங்கையிடமும் சீனா அனுமதி கோரியது. மாலைதீவு உடனடியாக அனுமதி கொடுத்துவிட்டது. மாலைதீவின் புதிய ஜனாதிபதி சீன சார்பானவர். அந்த நாட்டில் உள்ள இந்திய இராணுவத்தை வெளியேற உத்தரவிட்டுள்ளார்.

மொரிஷியஸில் நடைபெற்ற கொழும்பு பாதுகாப்பு பேச்சுவார்த்தையில் மாலைதீவு கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, மேலும் அது இந்தியாவுடன் செய்துள்ள கடல்சார் ஒப்பந்தத்தை புதுப்பிக்காது, மாலைதீவுகள் கொழும்பு பாதுகாப்பு உரையாடலில் இருந்து வெளியேறுவது சாத்தியம் என்பது பிராந்திய பாதுகாப்பு கட்டமைப்பு பற்றிய கவலைகளை எழுப்புகிறது.

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இரண்டு போர்க்கப்பல்களை ஆய்வுக்காக இலங்கை முன்னர் அனுமதித்தது. ஜனவரி மாதம் வரப்போகும் கப்பலுக்கு அனுமதி கொடுக்கவேண்டாம் என இந்தியா இலங்கையிடம் வேண்டுகோள் விடுத்தது. சீனக் கப்பலைத் தவிர வேறு கப்பல்கள் இலங்கையில் ஆய்வு செய்ததா என்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை.

# அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பு வாகனத்தின் மீது கார் மோதல்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பாதுகாப்பு வாகன அணிவகுப்பில் உள்ள வாகனத்தின் மீது கார் ஒன்று மோதியது.

அமெரிக்க ஜனாதிபதி, டெலாவேரில் உள்ள தனது பிரச்சார தலைமையகத்திலிருந்து வெளியேறும் போது இந்தச் சம்பவம் நடந்தது. பைடனின் வாகனத்திலிருந்து சுமார் 40 மீற்றர் (130 அடி) தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு பாதுகாப்பு வாகனம் மீது திடீரென ஒரு செடான் கார் மோதியது. திடீரென கேட்ட பெருத்த சம்பவத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதியின் பாதுகாப்பு கமாண்டோக்கள், பைடனை உடனடியாக அங்கிருந்த காத்திருப்பு வாகனத்தில் ஏற்றி, பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றனர்.

# ஹமாஸ் பயன்படுத்திய சுரங்கம் கண்டுபிடிப்பு

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பினரிடையே போர் நீடித்து வரும் நிலையில், காஸா பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் கட்டமைத்துப் பயன்படுத்தி வந்த 4 கி.மீ நீள சுரங்கப்பாதை ஒன்றை இஸ்ரேல் இராணுவம் கண்டறிந்து கைப்பற்றியிருக்கிறது. இந்தச் சுரங்கப் பாதை குறித்த தகவல்கள் மற்றும் காணொளிகள் அடங்கிய பதிவொன்றையும் தங்களுடைய அதி



காரபூர்வ எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்திருக்கிறது இஸ்ரேல் இராணுவம். இந்தக் குறிப்பிட்ட சுரங்கப்பாதையானது, காஸா மற்றும் இஸ்ரேல் இடையிலான எரஸ் எல்லைப் பகுதியிலிருந்து வெறும் 400 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருந்திருக்கிறது. மேலும், இஸ்ரேலுக்குள் நுழையும் பல்வேறு காஸாவினர் இந்தச் சுரங்கப்பாதையை தினசரி பயன்பாட்டிற்காக பயன்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது இஸ்ரேல் இராணுவம்.

# ஈரானில் இஸ்ரேல் உளவாளிக்கு மரணதண்டனை

டெஹ்ரான்: இஸ்ரேல் உளவாளி ஒருவர் ஈரானில் தூக்கில் இடப்பட்டதாக அந்நாட்டு அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஈரான் அரசு தொலைக்காட்சி நேற்று வெளியிட்ட செய்தியில், "இஸ்ரேல் உளவு நிறுவனமான மொசாட் உட்பட வெளிநாட்டு உளவு அமைப்புகளுடன் தொடர்புடைய ஒருவர் (விபரம் தரப்படவில்லை) சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஈரான் பாதுகாப்பு தொடர்பான ரகசிய தகவல்களை வெளியிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த அவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தென்கிழக்கு சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தின்ஜாஹேதான் நகரில் உள்ள சிறையில் அவருக்கு தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டது" என்று தெரிவித்து உள்ளது. கடந்த 2022 ஏப்ரலில் மொசாட் உடன் தொடர்புடைய 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரான் உளவு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில் தூக்கில் இடப்பட்டவர் இந்த மூவரில் ஒருவரா? என்பது தெரியவில்லை. தங்கள் நாட்டை உளவு பார்ப்பதாக ஈரானும் இஸ்ரேலும் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன.

# சீனாவில் வரலாறு காணாத உறைபனி

சீனாவில் வரலாறு காணாத அளவு பனி பொழிவதால் அங்கு மக்களின் இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சீன அரசு பனிப்பொழிவு மேலும் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி ஜிஜின்பிங் மக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். பீஜிங்கில் நடப்பாண்டில் பனிப்பொழிவு காலம் தொடங்கியவுடனே புதிய உச்சத்தில் குளிர்நிலை பதிவாகியுள்ளதால் பொதுப் போக்குவரத்தில் கடுமையான தாமதங்கள் நிகழ்கின்றன. ஓடுதளங்கள் வழுக்கும் சூழலில் இருப்பதால் விமானங்கள் பல ரத்து செய்யப்பட்டுள்ளன. டிச.14 இல் சீனாவில் பனியால் மெட்ரோ ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கணக்கான பயணிகள் காயமடைந்தனர்.

# திருகோணமலையில் கிறிஸ்மஸ் சுவிசேஷ விழா



கிறிஸ்மஸ் வருடாந்த சுவிசேஷ விழா திருகோணமலை YMCA மண்டபத்தில் போதகர் கலாநிதி க.முரளீதரன் தலைமையில் நேற்று (17) நடைபெற்றது.

பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

போதகர் கலாநிதி க.முரளீதரனினால் மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டதும் நடத்தப்பட்டது.

திருமலை திருச்சபையின் ஓய்வுநாள் பாடசாலை சிறார்களின் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# 24 மணித்தியாலங்களில் 2,121 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கடந்த 24 மணித்தியாலங்களில் 2,121 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களில் 12 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், 5 சந்தேகநபர்கள் தொடர்பில் சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் 133 பேர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விஷேட பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 116 சந்தேக நபர்களும் இங்கு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையின் போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் பட்டியல்

ஹெராயின் 2 கிலோ 232 கிராம்

அஷிஸ் 769 கிராம்

கஞ்சா 178 கிலோ 916 கிராம்

ஏஸ் 35 கிலோ 89 கிராம்

மாவா 626 கிராம்

கஞ்சா செடிகள் - 30,550

போதை மாத்திரைகள் - 3,489

# கிரிபத்கொடையில் துப்பாக்கிச் சூடு

கிரிபத்கொடை, கால சந்தி பகுதியிலுள்ள இரவு விடுதி ஒன்றில் இன்று (18) அதிகாலை 2.30 மணியளவில் துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் கிரிபத்கொடை பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# செவிப்புலனற்றோரின் நத்தார் விழா

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் வருடாந்த நத்தார் விழா நேற்று காலை 9.30 மணிக்கு மாலுசந்தியில் உள்ள வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்க மண்டபத்தில் அதன் செயலாளர் தலைமையில் இடம் பெற்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கரவெட்டி பிரிவின் தலைவர் ரகுபரன் பிரதம விருந்தினராகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர் பகீரதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு வடமராட்சி செவிப்புலனற்றோர் குடும்பங்களின் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைத்தனர்.



இந்நிகழ்வில் கரவெட்டி செவிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# சந்தையில் 10 மில்லியன் முட்டைகள்

இறக்குமதி செய்யப்பட்ட 10 மில்லியன் முட்டைகளை இன்று (18) முதல் சந்தைக்கு வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதியுடன் உரிய முட்டைகள் லங்கா சதொச நிறுவனத்திற்கு இன்று முதல் விநியோகிக்கப்பட உள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் முட்டை விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததால், நுகர்வோர் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்தது.

# மில்கோ தலைவர் இராஜினாமா

மில்கோ நிறுவனத்தின் தற்போதைய தலைவர் ரேணுக பெரேரா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி முதல், ரேணுக பெரேரா மில்கோ நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

அரசின் கொள்கை முடிவின்படி மில்கோ நிறுவனத்தை தனியார் மயமாக்கும் பணியை உள்ளூர் நிறுவனமும், இந்திய நிறுவனமும் இணைந்து தொடங்கியுள்ளனர்.

இந்தப் பின்னணியில், தனது சேவைக் காலம் இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில், நிறுவனத்தை மேலும் முன்னேற்றுவதற்கு தனது நேரத்தை செலவிடுவது பயனளிக்காத காரணத்தினால் பதவி விலக தீர்மானித்துள்ளதாக ரேணுக பெரேரா, நிதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



# சாய் சுதர்சன் அர்தீப்சிங் சாதனை இந்தியா வெற்றி

ஜோஹன்ஸ்பர்க்கில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 8 விக்கெட்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா 27.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்கள் எடுத்தது. 117 என்ற இலகுவான இலக்குடன் களம் இறங்கிய இந்தியா 16.4 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 117 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. 200 பந்துகள் மீதமிருக்கையில் வெற்றி பெற்ற இந்தியா சாதனை படைத்தது. 116 ஓட்டங்கள் எடுத்து சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிராக குறைந்தபட்ச ஒருநாள்ஸ்கோரை பதிவு செய்து மோசமான சாதனை படைத்தது தென்னாபிரிக்கா.

மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தென்னாபிரிக்கா இளஞ்சிவப்பு நிற சீருடையை அணிந்து விளையாடியது. பிங் சீருடையில் விளையாடும் போது தென் ஆபிரிக்கா பெரிய வெற்றிகளைப் பெற்றது. 11 போட்டிகளில் 9 வெற்றிகளையும் 2 தோல்விகளையும் மட்டுமே சந்தித்தது. 2018ஆம் ஆண்டு செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சகல விக்கெட்களையும் இழந்து 118 ஓட்டங்கள் எடுத்ததே இந்தியாவுக்கு எதிராக தங்களுடைய சொந்த மண்ணில் தென்னாபிரிக்கா பதிவு செய்த முந்தைய குறைந்தபட்ச ஸ்கோராகும். அறிமுகப் போட்டியில் அரை சதம் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்கள் அடித்த சாய் சுதர்சன் ஒரு நாள் கிரிக்கெட்டின் அறிமுக போட்டியிலேயே அரை சதமடித்த 17 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். அறிமுகப் போட்டியிலேயே அரை சதமடித்த 4 ஆவது இந்திய துவக்க வீரர் என்ற சாதனையும் அவர் படைத்துள்ளார்.

1. ராபின் உத்தப்பா : 86, இங்கிலாந்துக்கு எதிராக, 2006

2. கே.எல்.ராகுல் : 100*, ஸிம்பாப்பேவுக்கு எதிராக, 2016

3. பைஸ் பசல் : 55*, ஸிம்பாப்பேவுக்கு எதிராக, 2016

4. சாய் சுதர்சன் : 55*, தென்னாபிரிக்காவுக்கு, 2023*

டெஸ்ட், ஒருநாள், ரி20 ஆகிய அனைத்து வகையான கிரிக்கெட்டையும் சேர்த்து சர்வதேச அரங்கில் இந்தியாவுக்காக விளையாடிய 400 ஆவது வீரர் என்ற தனித்துவ சாதனையை சாய் சுதர்சன் படைத்துள்ளார். இதற்கு முன் 1961 இல் பாலோ குப்தே 100 ஆவது வீரராகவும், 1990 இல் குர்சன் சிங் 200 ஆவது வீரராகவும் 2008 இல் மன்ப்ரீத் கோனி 300 ஆவது வீரராகவும் அறிமுகமான நிலையில் தற்போது சுதர்சன் 400 ஆவது வீரராக இந்தியாவுக்கு அறிமுகமாகியுள்ளார்.

வரலாற்று சாதனையை படைத்த அர்ஷ்தீப் சிங் தென்னாபிரிக்க மண்ணில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார் அர்ஷ்தீப் சிங்.

முன்னதாக சுனில் ஜோஷி, யுஸ்வேந்திர சாஹல், ரவீந்திர ஜடேஜா ஆகிய மூன்று வீரர்களும் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக அந்த மண்ணில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். அவர்கள் மூவரும் சுழற்பந்து வீச்சாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்காவில் கிளப் உலகக்கிண்ணப் போட்டி

பீபாவின் உலகக்கிண்ண கிளப் போட்டி 2025ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஜூன் 15 முதல் ஜூலை 13, நடைபெறும். இது 32 அணிகள் பங்கு பற்றும் முதல் தொடராக அமைய உள்ளது.

தற்போதைய வருடாந்திர கிளப் உலகக்கோப்பை வடிவமைப்பைப் போல் இன்றி, புதிய அமைப்பு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே போட்டிகளை நடத்துகிறது. கிளப்புகள் புதிய நிலையான தரவரிசைகளுடன் போட்டிக்கு தகுதி பெறுகின்றன. இது வழக்கம் போல் ஒரு வெற்றிக்கு மூன்று புள்ளிகள் மற்றும் ஒரு சம நிலைக்கு ஒரு புள்ளியை வழங்குகிறது, அத்துடன் ஐரோப்பாவைத் தவிர ஐந்து கூட்டமைப்புகளின் கான்டினென்டல் போட்டிகளின் ஒவ்வொரு கட்டத்திற்கும் முன்னேற்றத்திற்கு மூன்று புள்ளிகள்.

UEFA சாம்பியன்ஸ் லீக்கின் குழு ஒரு கட்டத்தில் வெற்றிக்கு இரண்டு புள்ளிகள் மற்றும் தகுதிக்கு நான்கு புள்ளிகள் என ஐரோப்பிய கிளப்புகள் மிகவும் சிக்கலான வழிமுறைகளைக் கொண்டுள்ளன. 2025 போட்டியில் ஐரோப்பாவிலிருந்து 12 அணிகள், தென் அமெரிக்காவிலிருந்து ஆறு அணிகள், ஆசியா, ஆபிரிக்கா வடக்கு அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, ஓசியானியாவில் இருந்து தலா ஒரு நாடு, இவற்றுடன் போட்டியை நடத்தும் நாடு 2025 ஆம் ஆண்டு 20 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ணப் போட்டி சிலியிலும், 20 வயதுக் குட்பட்ட மகளிர் உலகக் கிண்ணப் போட்டியை 2026 ஆம் ஆண்டு போலந்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கட்டைக்காட்டில் KSPL - 2

கட்டைக்காடு சென்மேரிஸ் வி.க நடாத்தும் KSPL-2 ஆரம்ப வைபவம் நேற்று



மாலை 3 மணிக்கு கழக தலைவர் பி.றஜீத் தலைமையில் ஆரம்பமானது. பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் உட்பட கிராம அமைப்புகளின் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதல் போட்டியாக EASTEN UNITED எதிர் FIGHTER KINGS அணிகள் மோதின. போட்டியின் முடிவு சமநிலையாக மாற இரண்டாவது போட்டியாக 3 D STAR அணியை எதிர்த்து கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை அணி மோதின. இரண்டாவது போட்டியும் சமநிலையில் முடிய நான்கு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டன.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 18.12.2023 அன்று வெளியிடப்பட்டது.